பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 9
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16
அஷ்ஷெய்க் அனீஸுர் ரஹ்மான் அஃளமீ மதனீ 23
மதிப்புரை தமிழாக்கம் 24
இப்னு பாஸ் ﵀ வாழ்க்கைக் குறிப்பு 26
பகுதி 1: அகீதா ஓர் அறிமுகம் 31
1 அல்அகீதா – என்ன அர்த்தம்? 33
2 அகீதாவை எங்கிருந்து எடுப்பது? 41
3 கெட்ட அகீதாவின் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல! 50
4 கெட்ட அகீதா எப்படி உருவாகிறது? 55
5 கனிகள் வேண்டுவோர் ஆணிவேரைப் பாதுகாக்கட்டும் 77
6 குஃப்ர் – அகீதாவைத் தாக்கும் ஆசிடு 81
7 ஷிர்க் – அகீதாவைத் தாக்கும் ஆசிடு 84
8 ஆணிவேரின் ஆறு கிளைகள் 87
பகுதி 2: ஓரிறைக் கொள்கை 97
1 தவ்ஹீது – சொல் விளக்கம் 99
2 தவ்ஹீது வகைகள் 103
3 வஹ்தத்துல் வுஜூது தவ்ஹீதா? 107
4 தவ்ஹீது வகைகள் பித்அத்தா? 109
5 தவ்ஹீது அல்ஹாகிமிய்யா யார் வகுத்தது? 119
6 தவ்ஹீது புதிதல்ல 129
7 இதுதான் தவ்ஹீது 135
8 படைப்பின் நோக்கம் 142
9 இறை ஆதாரங்களின் முதல் அழைப்பு 147

பகுதி 3: இறைவணக்கம் 159

1 பிரார்த்தனை ஒரு வணக்கம் 165

2 பயம் ஒரு வணக்கம் 189

3 எதிர்பார்ப்பு ஒரு வணக்கம் 194

4 பலியிடல் ஒரு வணக்கம் 196

5 நேர்ச்சை ஒரு வணக்கம் 202

6 தவக்குல் ஒரு வணக்கம் 207

7 வணக்கங்களின் தூண்கள் 215

பகுதி 4: இணை வழிபாடு 227

1 ஷிர்க் ஓர் அதிபயங்கர அபாயம் 229

2 ஷிர்க்கின் பேரழிவுகள் 247

3 ஷிர்க்கின் தரங்கள் 262

பகுதி 5: ஓதிப்பார்த்தல் 267

1 ஓதிப்பார்ப்பதில் ஷிர்க் உண்டா? 269

2 தட்டு தகடு, தாயத்து, கயிறு ஷிர்க்கா? 281

பகுதி 6: சகுனம், சோதிடம், ராசிபலன் 293

1 சகுனம் பார்ப்பதில் ஷிர்க் உண்டா? 295

2 சோதிடம், குறி பார்த்தல், ராசிபலன் 305

3 சூனியம் 312

4 கற்களிலோ மரங்களிலோ பரக்கத் தேடலாமா? 316

பகுதி 7: நம்பிக்கையை வெளிப்படுத்தும் கடமைகள் 349

பகுதி 8: இறைவல்லமை 359

பகுதி 9: இறைப்பண்புகள் 367

1 தவ்ஹீதுல் அஸ்மா வஸ்-ஸிஃபாத் 369

2 தஹ்ரீஃப், தஃதீல், தக்யீஃப், தம்ஸீல் கூடாது 390

3 இதுதான் அஹ்லுஸ் ஸுன்னத்வல்-ஜமாஅத் அகீதா 403

4 அர்ஷ்மீது அல்லாஹ் உயர்ந்துவிட்டான் 416

பகுதி 10: மலக்குகள் 437

மலக்குகள் யார்? 439

சுருக்கமான நம்பிக்கை 439

மலக்குகள் விஷயத்தில் வழிகெட்டோர் 440
விரிவான நம்பிக்கை 443
மலக்குகளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் 445
பகுதி 11: வேதங்கள் 447
வேதங்களின் அவசியம் 449
மூவகை மனிதர்கள் 450
சுருக்கமான நம்பிக்கை 451
விரிவான நம்பிக்கை 452
பைபிள் ஒரு கலப்பட வேதம் 452
குர்ஆனைப் பின்பற்றுவது கட்டாயம் 453
வேதங்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் 454
பகுதி 12: தூதர்கள் 457
தூதர்கள் இல்லாமல் நேர்வழி இல்லை 459
சுருக்கமான நம்பிக்கை 461
நபி, ரசூல் வேறுபாடு 462
நபிமார்களும் அல்லாஹ்வின் அடிமைகளே! 463
விரிவான நம்பிக்கை 464
தூதர்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் 465
பகுதி 13: இறுதிநாள் 467
மறுமையின் தொடக்கம் 469
மண்ணறை குழப்பங்கள் 471
மண்ணறை துன்பங்கள் 471
மண்ணறை இன்பங்கள் 472
மறுமை நாள் திடுக்கங்கள் 473
சிராத் பாலம் 476
தராசு நிறுத்தப்படும் 477
கேள்விக்கணக்கு கேட்கப்படும் 478
கூலி வழங்கப்படும் 479
பதிவேடுகள் வெளியாகும் 480

கவ்ஸர் தடாகம் 482
சொர்க்கம் 482
நரகம் 483
அல்லாஹ்வைக் காணுதல் 483
இறுதிநாளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் 485
பகுதி 14: விதி 487
விதியில் வழிகெட்டவர்கள் 491
விதியை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் 493
பகுதி 15: ஈமான் ஒரு விளக்கம் 495
தொழுகையும் ஈமான்தான் 497
ஈமான் கூடும் குறையும் 498
ஈமானுக்கு இமாம் ஷாஃபிஈ ﵀ அழகிய விளக்கம் 498
விரும்புவதும் வெறுப்பதும் அல்லாஹ்வுக்காகவே! 515
பகுதி 16: நேர்வழி பெற்ற கூட்டம் 517
நபித்தோழர்கள் – நபிமார்களுக்கு அடுத்தவர்கள் 519
நபித்தோழர்கள் – இறுதி வரை நேர்வழியில் நிலைத்தவர்கள் 520
நபித்தோழர்களைப் பின்பற்றியோரே பாதுகாப்பு பெற்றவர்கள் 523
பகுதி 17: வழிதவறிய கூட்டங்கள் 525
இணைவைப்பவர்கள் 527
படைப்புகளிடம் பரிந்துரை கேட்பவர்கள் 528
நாத்திகம் பேசுபவர்கள் 530
பாத்தினிய்யாக்கள், சூஃபியாக்கள் 531
அடக்கத்தலங்களைப் பூஜிப்பவர்கள் 534
சமாதி வழிபாடும் பகிரங்க இணைவைப்பே! 534
பித்அத் செய்பவர்கள் 537
பித்அத் என்றால் என்ன? 539

1

அல்அகீதா – என்ன அர்த்தம்?

❀

அல்அகீதா (اَلْعَقِيْدَةُ) என்பதற்கு 'கொள்கை' என்கிறோம் தமிழில். ஆனால், அகீதா எனும் சொல்லில் உள்ள ஆழமும் அழுத்தமும் கொள்கை என்பதில் இல்லை. கொள்கை என்பது ஒருவர் தமக்கென கொண்டிருக்கும் கருத்தை, செயலை, வழிமுறையைக் குறிப்பிடும். அதை அவர் தம் சுய அறிவால் ஆராய்ந்தோ, தம் கண்களால் பார்த்தோ, யாரோ சொன்னார்கள், செய்தார்கள் என்பதினாலோ ஏற்றிருக்கலாம்.

உதாரணமாக, விஞ்ஞானிகள் இந்த வானம், பூமி, உயிரினங்களைப் பற்றி சில கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். புலன்களைக் கொண்டும் கருவிகளைக் கொண்டும் ஆராய்ந்து அறிந்த கருத்துகளே அவர்களின் கொள்கைகள். அதில் உண்மை, பொய் எதுவும் இருக்கலாம். பூமி உருண்டை என்பது அவர்களின் கொள்கை. அதேபோல், மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான் என்பதும் அவர்களுக்கு ஒரு கொள்கை. சுய அறிவு சொல்லும் முடிவே அவர்களின் கொள்கைக்கு அடிப்படை. ஆனால், இவை எதுவும் அல்அகீதா எனும் வார்த்தைக்குப் பொருந்தாது.

அல்அகீதா எனும் சொல் 'அல்அக்த்' (اَلْعَقْدُ) என்ற வேர்ச் சொல்லிலிருந்து உருவாகிறது. ஒன்றை உறுதியாக இணைத்துக் கட்டுதல் என்பது இதன் அர்த்தம். 'இஅதகத்து கதா' (اِعْتَقَدْتُ كَذَا) என்றால், என் உள்ளமும் சிந்தனையும் இதன் மீதே இணைந்துள்ளது என்று பொருள். மனிதன் எதைத் தன் மார்க்கமாக நம்புகிறானோ அதுவே அகீதா. 'அவனுடைய அகீதா சரியானது' என்று கூறினால், அது சந்தேகத்தை விட்டு நீங்கியது என அர்த்தம். அகீதா என்பது உள்ளத்தின் செயல்பாடு. அதாவது, உள்ளம் ஒன்றை நம்பிக்கை கொண்டு, அதை உண்மைப்படுத்த வேண்டும். இஸ்லாமிய மார்க்கத்தில் அகீதா என்பது அல்லாஹ், வானவர்கள், வேதங்கள்,

6

குஃப்ர் – அகீதாவைத் தாக்கும் ஆசிடு

❀

وَمَنْ يَّكْفُرْ بِالْإِيْمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِيْنَ

எவன் நம்பிக்கைகொண்ட பின்னர் நிராகரிக்கிறானோ அவனுடைய நற்செயல் அழிந்தே போகும். மறுமையில் அவன் நஷ்டமடைந்தவனாகவே இருப்பான். (குர்ஆன் 5:5)

அகீதா கெட்டால் அமல்கள் அழியும் என்பதற்கு இமாமவர்கள் முன்வைக்கும் முதல் ஆதாரம் இது. இந்த வசனத்தைப் புரிவதற்கு இறைநிராகரிப்பு (குஃப்ர்) என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். குஃப்ர், அதாவது மறைத்தல் என்று அறபியில் அர்த்தம். எது மறைக்கப்படுகிறது? உண்மை, சத்தியம் மறைக்கப்படுகிறது. உள்ளத்தில் அதை மறைத்து, வெளியில் அதை மறுக்கப்படுகிறது. அல்லாஹ் எல்லாருடைய உள்ளங்களிலும் பிறப்பிலேயே அவனைப் பற்றிய களங்கமில்லா நம்பிக்கையை விதைத்தே அனுப்புகிறான். ஆம், ஃபித்ரா என்போமே, அதுதான்.

ஆனால், பாருங்கள், மனிதன் அவனுடைய பெற்றோர் வளர்ப்பினாலோ, மற்றவர்கள் திணிப்பினாலோ மூளைச் சலவைக்கு ஆளாகி, தனக்குள் விதைக்கப்பட்ட சத்தியத்தை மறைக்கத் தொடங்குகிறான். சத்தியம் சொல்லப்பட்டால், அதைத் துணிந்து மறுக்கவும் செய்கிறான். உண்மையை மறைப்பவன், பொய்யை ஏற்கிறான், அதன் மூலம் உண்மையை மறுக்கிறான். பொய்யை நம்பிக்கைகொள்கிறான். இது, இதுதான் குஃப்ர்.

தமிழில் இறைநிராகரிப்பு, இறைமறுப்பு என்கிறோம். ஆனால் குஃப்ரைக் கொஞ்சம் நிதானித்து புரிந்தால், இந்த வார்த்தைகளெல்லாம் மேலோட்டமானவை என்றே புரியும்.

8

ஆணிவேரின் ஆறு கிளைகள்

❀

பின்வரும் ஆறு விசயங்களில் நம்பிக்கை வைப்பது சரியான அகீதாவின் அடிப்படையாகும்.

1. அல்லாஹ்
2. வானவர்கள்
3. வேதங்கள்
4. தூதர்கள்
5. மறுமை
6. விதியின் நன்மை, தீமை

அல்லாஹ்வின் தெளிவான வேதத்திலும், நம்பிக்கைக்குரிய அவனுடைய தூதரின் ஸுன்னாவிலும் வந்துள்ள இந்த ஆறு அடிப்படைகளிலிருந்தே மறைவானவற்றின் மீதான மற்ற நம்பிக்கைகளும் உருவாகின்றன.

நல்ல அகீதாவின் அவசியத்தைச் சொல்லி முடித்துவிட்டு, அந்த அகீதாவில் என்னவெல்லாம் அடங்கும் என்று ஆரம்பிக்கிறார்கள் இப்னு பாஸ் ﷺ. நான்கு விசயங்களை கவனத்தில் வையுங்கள்.

1. ஈமானின் இந்த ஆறு தூண்களும் மறைவானவை. எனவேதான், அகீதா இவற்றின்மீது கட்டப்படுகிறது.
2. இந்த ஆறு அம்சங்களை நம்பிக்கைகொண்ட பிறகு, இவற்றின் கிளைகளாக மார்க்கம் கூறும் மற்ற மறைவான விசயங்களையும் நம்பித்தான் ஆகவேண்டும். உதாரணமாக, அல்லாஹ்வை நம்பிக்கைகொண்ட பின், அவனின் பெயர்கள், பண்புகளாக குர்ஆனும் நபிமொழியும் என்னவெல்லாம் கூறியுள்ளனவோ, அவை அனைத்தையும் எந்த எதிர்கேள்வியும் கேட்காமல் நம்பித்தான் ஆக வேண்டும்.

1

தவ்ஹீது – சொல் விளக்கம்

❀

அறபுமொழியில் தவ்ஹீது (تَوحِيْدٌ) என்பது ஒரு பெயர்ச்சொல். வஹ்ஹத, யுவஹ்ஹிது (وَحَّدَ يُوَحِّدُ) எனும் வினைச்சொல்லின் வேர்ச் சொல். எதையேனும் ஒன்றாக்குதல் என்று அர்த்தம். (அறபியில் 'வஹ்ஹத அல்மலிக்கு அல்பிலாதா' என்றால், நாட்டின் எல்லாப் பகுதிகளையும் அரசன் ஒன்றிணைத்தான் எனப் பொருள். வாஹிது என்றால் ஒன்று. இது இரண்டு, மூன்று, இன்னும் பல என்பவற்றுக்கு எதிரானது. ஒரு பொருள் அதன் நிலையில் ஒருமையாகவே இருந்து, எந்தப் பொருளுடனும் இணை சேராமல் இருப்பதை இது குறிப்பிடும்.)

ஒன்றை ஒருமைப்படுத்துதல் என்பது மறுத்தல், உறுதிப்படுத்து தல் இரண்டும் இல்லாமல் அமைய முடியாது. ஒரு பொருளை அது ஒன்றே என உறுதிப்படுத்த வேண்டுமானால், அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுக்க வேண்டும்.

உதாரணமாக, வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர எது வும் தகுதியானதில்லை என்று மனிதர்கள் சாட்சி கூற வேண்டும். இப்படிக் கூறினால் மட்டுமே தவ்ஹீதின் கருத்தை அவர்கள் முழுமையாக ஏற்றவர்களாக முடியும். இதன் மூலம் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் வணங்குவது மறுக்கப்படுகிறது; வணக்கங் கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று உறுதிப்படுத்தப்படுகிறது.

மறுத்தல் இல்லாமல் ஒன்றை உறுதிப்படுத்தினால், அது முழுமை யான உறுதிப்படுத்தல் ஆகாது. மறுக்கப்பட வேண்டியவைக்கு அதில் பங்கிருப்பதற்குச் சாத்தியம் உண்டு. எதை உறுதிப்படுத்த வேண்டுமோ அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுத்தால்தான், உண்மையில் உறுதிப்படுத்துதல் அங்கு நிகழும்.

உதாரணமாக, 'இன்னார் நின்றுகொண்டிருக்கிறார்' என்று நீங்கள் கூறினால், உண்மையில் அவர் ஒருவர் மட்டுமே நிற்கிறார் என

3

வஹ்தத்துல் வுஜூது தவ்ஹீதா?

❀

வஹ்தத்துல் வுஜூது என்றால் என்ன?

‘இருப்பது ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்றின் வெளிப்பாடுதான் எல்லாப் படைப்புகளும். அல்லாஹ்தான் அந்த ஒன்றாக இருப்பவன். அல்லாஹ்வைத் தவிர எதுவுமில்லை. நாம் பார்க்கின்ற அனைத்தும் மாயை. இருப்பது அல்லாஹ் மட்டும்தான். அனைத்திலும் அவனையே பார்க்கிறோம்.’

வஹ்தத்துல் வுஜூதிற்கு அதன் விசுவாசிகள் கொடுக்கும் விளக்கம் இதுதான். உண்மையில் அல்லாஹ்வை இப்படித்தான் ஒருமைப்படுத்தி நம்ப வேண்டுமாம். இதுதான் உண்மை தவ்ஹீதாம்.

இதன் மூலம் தவ்ஹீதின் பல அம்சங்களை நிராகரித்த இவர்கள், தவ்ஹீது ஒரு வகையே என்றார்கள்.

இவர்கள் தவ்ஹீதின் வகைகளைப் புறக்கணித்த காரணம், அவை அல்லாஹ்வின் ஒருமை நிலையை அவனுடைய பெயர்கள், பண்புகளைக் கொண்டும், அவனுக்குரிய வணக்கங்களைக் கொண்டுமே நிலைநாட்டுகின்றன என்பதனால்தான்.

அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை மாற்றாமல், மறுக்காமல், விவரிக்காமல், ஒப்பிடாமல் அப்படியே அவனுக்கு உண்டென ஏற்கும்போது, அவன் தன் படைப்புகளை விட்டு அப்பாற்பட்டவன் என்பது உறுதியாகி, அனைத்தும் ஒன்றே எனும் வஹ்தத்துல் வுஜூதுகொள்கை அடிபட்டுவிடுகிறது.

தவ்ஹீதின் மிக உயர்ந்த நிலையைத் தாங்கள் சொல்லுவதாக நம்பும் இம்மக்கள், அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்த வேண்டிய முறையில் கண்ணியப்படுத்துவதில்லை. அவனுடைய பண்புகளை மறுத்து, அவன் எங்குமிருக்கிறான், எதிலும் இருக்கிறான் எனவும் நம்பினார்கள்; நம்புகிறார்கள்.

இதில் தவ்ஹீதின் மூன்று வகையையும் இமாம் கூறியுள்ளார்கள்.

'பிரார்த்திப்பவர் தம் முகத்தை மேல் நோக்கியே திருப்புகிறார்; கீழ்நோக்கி அல்ல' என்ற கூற்றில் அல்லாஹ் தன் படைப்புகளை விட்டு மேலே இருக்கிறான் எனும் தவ்ஹீது அல்அஸ்மா வஸ்ஸிஃபாத் இருக்கிறது. இதில் ஜஹ்மிய்யா, முஅதஸிலா, அஷ் அரீய்யா, மாதுரீதிய்யா[20] மற்றும் பிற கூட்டங்களுக்கு மறுப்பு உள்ளது. ஏனெனில், அல்லாஹ்வின் அல்உலூவ் (படைப்பு களை விட்டு உயர்ந்த) நிலையை அவர்கள் மறுக்கிறார்கள்.

'கீழ்நோக்கியதற்கு ருபூபிய்யத்தும் இல்லை; உலூஹிய்யத்தும் இல்லை' என்ற கூற்றில் தவ்ஹீது அர்ருபூபிய்யாவும் அல்உலூ ஹிய்யாவும் இருக்கிறது.

2. இப்னு ஜரீர் அத்தபரீ[21] (இறப்பு ஹிஜ்ரீ 310) அவர்கள் பின்வரும் வசனத்திற்கு தாம் எழுதிய குர்ஆன் விரிவுரையில் கூறினார்கள்:

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا اللهُ وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ

(நபியே!) அறிந்துகொள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர யாருமில்லை; உமது பாவங்களுக்கு மன்னிப்பு கோருவீராக. (குர்ஆன் 47:19)

அதாவது, முஹம்மதே! அறிந்துகொள்: வணங்கப்படுவதற்குத் தகுதி உள்ளவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவனே அல்உலூஹிய்யா கொண்டவன். அந்த அல்லாஹ்வைத் தவிர யாரை வணங்கவும் உமக்கு அனுமதியில்லை; எந்த

---

20 மாதுரீதிய்யா: இவர்கள் அபூமன்சூர் அல்மாதுரீதீ என்பவரைப் பின்பற்றுபவர்கள். ஹனஃபீ மத்ஹபைச் சேர்ந்த இவர், ஹிஜ்ரீ 333இல் இறந்தார். "என்னுடைய ஈமான், ஜிப்ரீல் அவர்களது ஈமானைப் போன்றது" என்றார் இவர். காரணம், இந்தக் கூட்டத்தின் கொள்கைகளில் ஒன்று, ஈமான் கூடவோ குறையவோ செய்யாது. அனைவரும் அதில் சமம்.

21 தபரீ: அபூஜஅஃபர் முஹம்மது இப்னு ஜரீர் அத்தபரீ ﵀ ஆகிய இவர்கள், மேற்கு ஈரானிலுள்ள தப்ரிஸ்தான் நகரில் ஹிஜ்ரீ 225 (கி.பி. 839)இல் பிறந்தார்கள். ஹதீஸ், குர்ஆன் விரிவுரை, வரலாறு உள்ளிட்ட துறைகளின் பேரறிஞராக விளங்கிய இவர்கள், 'ஜாமிஉல் பயான் ஃபீ தஃவீலில் குர்ஆன்' எனும் பெயரில் குர்ஆனுக்கு மகத்தான விரிவுரை எழுதினார்கள். இன்று தஃப்சீர் தபரீ எனக் கூறப்படும் இதுதான், இன்றுள்ள தஃப்சீர்களிலே மிகப் பழமையானது. ஹிஜ்ரீ 310 (கி.பி. 923)இல் இராக்கின் பஃக்தாத் நகரில் மரணித்தார்கள்.

6

தவ்ஹீது புதிதல்ல

❀

தவ்ஹீதைப் பற்றிய அறிவு காலப்போக்கில் மங்கியதால், மக்கள் தவ்ஹீது எனும் சொல்லையே விநோதமாகப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். சிலர் ஒரு படி மேலே போய், இந்த வார்த்தைக்கும் இஸ்லாமுக்கும் சம்பந்தமே இல்லை, இது குர்ஆனிலும் இல்லை, ஹதீஸிலும் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். எவரேனும் தவ்ஹீது எனப் பேசினால், அவர் தங்களுக்குச் சம்பந்தமில்லாத, அவசியமில்லாத ஒன்றைப் பேசுவதாக நினைக்கிறார்கள். இது வருந்தத்தக்க நிலைமை. அறியாமையின் உச்சம். தவ்ஹீதுதான் இந்த மார்க்கத்தின் அஸ்திவாரம். நபிமொழிகளில் இவ்வார்த்தை நேரடியாகவே வந்துள்ளது. நபித்தோழர்களும் அவர்களைப் பின்பற்றிய இமாம்களும் இதைப் பரப்ப தங்கள் ஆயுளையே அல்லாஹ்வுக்கு அர்ப்பணித்தார்கள்.

இமாம்கள் அபூஹனீஃபா, மாலிக், ஷாஃபிஈ, அஹ்மத் இப்னு ஹம்பல் ﷺ போன்றவர்களாயினும், இவர்களுக்குப் பின் வந்த ஹதீஸ் துறை இமாம்களாயினும் அனைவருமே தவ்ஹீதின் பக்கமே மக்களை அழைத்தார்கள். இது குறித்த ஆதாரங்களைப் பாருங்கள்.

முதல் ஆதாரம்:

இமாம் புகாரீ[26] ﷺ தமது புகாரீயில் 'கிதாபுத் தவ்ஹீது' (தவ்ஹீது புத்தகம்) எனும் ஒரு பகுதியை ஒதுக்கி, அல்லாஹ்வின் தவ்ஹீது

---

26 முஹம்மது இப்னு இஸ்மாயீல் எனும் இயற்பெயர்கொண்ட இமாமவர்கள், உஸ்பெகிஸ்தானில் உள்ள புகாரா நகரத்தில் ஹிஜ்ரீ 194 (கி.பி. 810) ஷவ்வால் மாதத்தில் பிறந்தார்கள். பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தபோதிலும், தாயின் வளர்ப்பில் மார்க்கத்தின் பேரறிஞராக உருவானார்கள். குர்ஆனுக்கு அடுத்து மார்க்கத்தின் ஆதார நூல்களில் முதல் தரமானதாக இஸ்லாமியப் பேரறிஞர்கள் ஒருமித்து ஏற்றுக்கொண்ட புகாரீ எனும் நபிமொழித் தொகுப்பு,

வஸீலாவில் வரும் ஷிர்க்

வஸீலாவை துஆவின் ஒரு வடிவம் எனலாம். ஆகவேதான், அவ்லியாக்களிடம் உதவி தேடுவோர் இதன் வழியாகவும் ஷிர்க்கைச் செய்கின்றனர்.

இவர்கள், 'துஆ எனும் சொல்லிற்கு இருவிதமான அர்த்தங்கள் உண்டு. சாதாரணமாக அழைத்தல், கூப்பிடுதல் என்ற அர்த்தம் ஒரு விதம். வணங்குதல், பூஜித்தல் என்ற அர்த்தம் மற்றொரு விதம்.. எந்த முஸ்லிமும் கப்ருகளை வணங்குவதுமில்லை; பூஜிப்பதுமில்லை. வஸீலாவை முன்னிட்டு நபிமார்கள், அவ்லியாக்களை அழைத்துக் கூப்பிடுவது ஒருபோதும் இபாதத்து எனும் தெய்வ வணக்கமாகாது..' என்று ஷிர்க்கை நியாயப்படுத்துகிறார்கள். காரியங்கள் கைகூட அவ்லியாக்களின் துணையை நாடுவதுதான் வஸீலா என்கிறார்கள்.

உண்மையில், வஸீலா என்றால் என்ன? அதில் ஆகுமான முறை எது? தடுக்கப்பட்ட முறை எது? இவற்றை அறிய வேண்டும்.

ஷெய்க் ஸாலிஹ் அஸ்ஸுஹைமீ கூறுகிறார்கள்:

'தவஸ்ஸுல்' என்றால் நெருங்குதல் எனப் பொருள். 'அல்வஸீலா' என்பதற்கு ஒன்றை நெருங்கச் செய்யும் ஊடகம், துணை சாதனம் எனப் பொருள் கொள்ளலாம். (இமாம் இப்னு அஸீர் எழுதிய அந்நிஹாயா, ப: 5/185) மார்க்கத்தில் வஸீலா என்றால் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும் நற்செயல்கள் மூலம் அவனை நெருங்குவதாகும். வஸீலா வார்த்தை குர்ஆனில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَابْتَغُوا إِلَيْهِ الْوَسِيلَةَ وَجَاهِدُوا فِي سَبِيلِهِ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

1. அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டோரே! அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள். அவனிடம் நெருங்குவதற்குரிய வழியைத் தேடிக்கொள்ளுங்கள். அவனுடைய பாதையில் போர் செய்யுங்கள். அதனால் வெற்றியடைவீர்கள். (குர்ஆன் 5:35)

أُولَئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَى رَبِّهِمُ الْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا

2. இவர்கள் யாரைப் பிரார்த்தித்து அழைக்கிறார்களோ அவர்களுமோ தங்கள் இறைவனிடம் தங்களில் மிக நெருக்கமானவராக

4

பலியிடல் ஒரு வணக்கம்

❀

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلهِ رَبِّ الْعَالَمِينَ، لَا شَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ

(நபியே!) கூறுவீராக: நிச்சயமாக என் தொழுகையும், என் பலியும், என் வாழ்வும், என் மரணமும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியவை. அவனுக்கு எந்த இணையுமில்லை. இப்படித்தான் கட்டளையிடப்பட்டுள்ளேன். ஆகவே, அவனுக்குக் கட்டுப்பட்டவர்களில் நான் முதன்மையானவன். *(குர்ஆன் 6:162,163)*

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ

(நபியே!) உம் இறைவனைத் தொழுவீராக! பலியும் கொடுத்து வருவீராக! *(குர்ஆன் 108:2)*

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَعَنَ اللهُ مَنْ ذَبَحَ لِغَيْرِ اللهِ

அல்லாஹ் அல்லாதவருக்குப் பலியிடுபவனை அல்லாஹ் சபிப்பானாக! *(அறிவிப்பு: அபுத்துஃபைல் ؓ, ஸஹீஹ் முஸ்லிம் 1978)*

இந்த நபிமொழியின் விளக்கத்தில் இமாம் நவவீ ؒ எழுதுகிறார்கள்:

அல்லாஹ் அல்லாதவர்களுக்காக பலியிடல் என்றால் ஒருவன் சிலைக்காகவோ, சிலுவைக்காகவோ, நபி மூஸா ؑ அவர்களுக்காகவோ, நபி ஈஸா ؑ அவர்களுக்காகவோ, கஅபாவிற்காகவோ, வேறு எதற்காகவோ அறுத்துப் பலியிடுதல் போன்றதாகும். இவை அனைத்தும் ஹறாம். அறுப்பவன் முஸ்லிமாகவோ, கிறித்துவனாகவோ, யூதனாகவோ இருந்தாலும் அந்தப் பலிப் பிராணி ஹலால் ஆகாது. இதையே இமாம் ஷாஃபிஈ ؒ உறுதி

7

வணக்கங்களின் தூண்கள்

❀

ஆசை, அச்சம், அன்பு

வணக்கங்களில் அவனுக்கு முன் பணிவை வெளிப்படுத்த வேண்டும். அவனை நேசிக்க வேண்டும். அவனுக்கே பயப்பட வேண்டும். அவனுடைய கண்ணியத்திற்கு முன் ஆசையுடனும் பயத்துடனும் நடக்க வேண்டும்.

அதிகமான குர்ஆன் வசனங்கள் இந்த மகத்தான அடிப்படையில் தான் இறங்கியுள்ளன. அல்லாஹ் கூறுகிறான்:

فَاعْبُدِ اللهَ مُخْلِصاً لَّهُ الدِّينِ أَلاَ لِلَّهِ الدِّينُ الْخَالِصُ

முற்றிலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, தூய உள்ளத்துடன் அவனையே வணங்குவீராக. அறிந்துகொள்ளுங்கள்: தூய வணக்கம் அல்லாஹ்வுக்கே சொந்தம். (குர்ஆன் 39:2-3)

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியும் ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் பின்வரும் மூன்று அம்சங்களும் சம அளவில் அமைந்திருக்க வேண்டும்.

1. அர்ரங்பா (الرغبة) – ஆசை
2. அர்ரஹ்பா (الرهبة) – அச்சம்
3. அல்ஹுப்பு (الحب) – அன்பு

அதாவது, அல்லாஹ்வின் அருளை அடையும் ஆசையும் இருக்க வேண்டும். அவனுடைய தண்டனைக்கு அஞ்சவும் வேண்டும். அதே சமயம், அவனை நேசிக்கவும் வேண்டும். இவை மூன்றும் கலவையாக இருந்தால்தான் வணக்கங்கள் சீராக இருக்கும். இவையே வணக்கங்களைத் தாங்கும் தூண்கள்.

1

ஷிர்க் ஓர் அதிபயங்கர அபாயம்

❀

وَقَضَى رَبُّكَ أَلاَّ تَعْبُدُواْ إِلاَّ إِيَّاهُ

(நபியே!) உம் இறைவன் தன்னைத் தவிர (யாரையும்) வணங்கக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறான்.. (குர்ஆன் 17:23)

فَادْعُواْ اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ

(முஸ்லிம்களே!) அல்லாஹ்வை நிராகரிப்பவர்கள் வெறுத்தாலும் முற்றிலும் அவனுக்கே கீழ்ப்படிந்து, தூய உள்ளத்துடன் அல்லாஹ்வையே (பிரார்த்தித்து) அழையுங்கள். (குர்ஆன் 40:14)

அல்லாஹ்வின் தூதர் ﷺ சொன்னார்கள்:

فَإِنَّ حَقَّ اللهِ عَلَى الْعِبَادِ أَنْ يَعْبُدُوهُ وَلاَ يُشْرِكُوا بِهِ شَيْئًا

அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குரிய உரிமை, அவர்கள் அவனையே வணங்க வேண்டும்; அவனுக்கு எதையும் இணையாக்காமல் இருக்க வேண்டும். (அறிவிப்பு: முஆது இப்னு ஜபல் ؓ, ஸஹீஹுல் புகாரீ 2856, ஸஹீஹ் முஸ்லிம் 30)

இமாம் இப்னு பாஸ் ؒ குறிப்பிடும் இந்த ஹதீஸிற்கு ஒரு பின்னணி இருக்கிறது. ஒரு தடவை நபி ﷺ அவர்களும் முஆது இப்னு ஜபல் ؓ அவர்களும் ஒரே வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். கழுதைதான் அந்த வாகனம். உஃபைர் என்று பெயர். நபியவர்கள் அதை ஓட்டிக்கொண்டிருக்க, அவர்களுக்குப் பின்புறம் முஆது ؓ உட்கார்ந்திருந்தார்கள். இருவருக்கும் இடையில் ஒரே ஒரு சாய்வுக்கட்டைதான்.

வழியில், 'முஆது!' என்றார்கள் நபி ﷺ. 'இதோ.. கீழ்ப்படியக் காத்திருக்கிறேன் அல்லாஹ்வின் தூதரே!' எனப் பதிலளித்தார்கள் முஆது ؓ. நபியவர்கள் எதுவும் சொல்ல வில்லை. பயணம் தொடர்ந்தது. சிறிது நேரத்திற்குப் பின் மீண்டும், 'முஆது!' என்று

2

ஷிர்க்கின் பேரழிவுகள்

❀

1. ஷிர்க்கிலிருந்து விலகாதவர்களுக்கு மன்னிப்பே இல்லை

إِنَّ اللهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க வேமாட்டான். இதைத் தவிர மற்றதை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். (குர்ஆன் 4:48)

'குர்ஆனில் எனக்கு இதைவிட விருப்பமான வசனம் எதுவுமில்லை' என்றார்கள் அலீ ﷺ. (தஃப்சீர் இப்னு கஸீர் 2/413) ஏனெனில், அல்லாஹ் எந்தப் பாவத்தையும் மன்னிக்கமாட்டான் என்றால் யாருமே சொர்க்கம் போக முடியாது. சிறிதோ பெரிதோ பாவம் செய்யாத மனிதனே இல்லை. அந்த வகையில் மூஃமின்களுக்கு இவ்வசனம் ஒரு நற்செய்தியே.

அதே நேரம், ஷிர்க் செய்பவனுக்கு இதில் கடும் அச்சுறுத்தல் இருக்கிறது. மறுமையில் விசாரணை நடக்கும்போது எந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு அல்லது தண்டனை என்ற இரண்டு நிலை உண்டு. அல்லாஹ் நாடினால் மன்னிப்பான் அல்லது தண்டிப்பான். ஆனால், ஷிர்க்கைப் பொறுத்த வரை தண்டனை மட்டும்தான், மன்னிப்பே இல்லை.

ஷிர்க் செய்பவன் ஆயுள் முடிவதற்கு முன்பே இந்தப் பாவத்திலிருந்து விலகி மன்னிப்புக் கேட்டு திருந்தினால் தப்பித்துவிடுவான். அல்லாஹ்வும் அவனை மன்னித்து விடுவான். ஆனால், மறுமையில் எவ்வளவுதான் கெஞ்சினாலும் கதறினாலும் அவனுக்கு மன்னிப்பே கிடையாது. மகா அநீதிக்கும் மாபெரும் நன்றி கெட்டத்தனத்திற்கும் பாவத்திற்கும் இதுவே தண்டனை. ஒரு நபிமொழி சொல்கிறது:

3

ஷிர்க்கின் தரங்கள்

❀

முதல் தரம்: பெரிய ஷிர்க்

இது ஒருவனைக் காஃபிர் ஆக்கிவிடும். இதைச் செய்பவன் தன் மரணத்திற்கு முன் இதிலிருந்து விலகி மன்னிப்புத் தேடாவிட்டால் அவனுக்கு நிரந்தர நரகம்.

அல்லாஹ்வுக்குரிய வணக்கங்களை அவன் அல்லாதவர்களுக்குச் செய்வதாக இது அமையும். உதாரணமாக, பிரார்த்தனைகள், நேர்ச்சைகள், அறுத்துப் பலி கொடுத்தல் இவற்றை ஜின்னுக்கோ, ஷைத்தானுக்கோ, சமாதிகளுக்கோ செய்வது.

அத்துடன், இறந்தவர்களோ ஜின்னோ ஷைத்தானோ தனக்குத் தீங்கு செய்துவிடும் என்று அவர்களுக்குப் பயப்படுதல், இன்று நல்லடியார்களின் சமாதிகளில் நடப்பதைப்போல் அவர்களிடம் தன் தேவைகளை ஆதரவு வைத்தல், அல்லாஹ் அல்லாதவர்களிடம் நிவாரணத்தை எதிர்பார்த்தல் போன்றவை. அல்லாஹ் கூறுகிறான்:

وَيَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُولُونَهَؤُلَاءِ شُفَعَاؤُنَا عِنْدَ اللَّهِ

தங்களுக்கு எந்த நன்மையும் தீமையும் செய்ய முடியாத அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவதுடன், 'அல்லாஹ்விடம் இவை எங்களுக்குப் பரிந்துரை செய்பவை' என்றும் கூறுகிறார்கள். *(குர்ஆன் 10:18)*

இரண்டாவது தரம்: சிறிய ஷிர்க்

இது ஒருவனைக் காஃபிர் ஆக்காது. ஆனால், தவ்ஹீதுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பெரிய ஷிர்க்கிற்கு வழி வகுக்கும்.

இது இரண்டு வகை.

1

தவ்ஹீதுல் அஸ்மா வஸ்-ஸிஃபாத்

❀

அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்களும் உயர்ந்த பண்புகளும் உண்டென நம்புவதும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில் அடங்கும்.

புத்தகத்தின் அதி முக்கியமான தலைப்புக்கு வந்திருக்கிறோம். தவ்ஹீதின் பெயரில் பயங்கர சர்ச்சைகள் செய்யப்பட்ட, செய்யப் படும் தலைப்பு. அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை எப்படி நம்பிக்கை கொள்வது? எந்தப் பண்பு அவனுக்கு உண்டு, எது அவனுக்கு இல்லை? அல்லாஹ் என்கிறோமே, அவன் யார்? அவன் எங்கே? அவனைப் பார்க்க முடியுமா?

சரித்திரத்தைப் பாருங்கள், யாரெல்லாம் நேர்வழியை விட்டுத் தடம்புரண்டார்களோ, அவர்கள் நிச்சயம் இதில் தாறுமாறாக, குழம்பிப் போயிருப்பார்கள். என்னவோ அல்லாஹ்வையே தாங்கள் நேரில் பார்த்து வருணிப்பதாய் நினைத்துக்கொண்டு, அல்லாஹ் வைப் பற்றி இல்லாதது பொல்லாததை உளறிக்கொண்டிருப்பார்கள்.

எதையாவது ஒரு பண்பை அல்லாஹ்வுக்கு உண்டு என்பார்கள். ஆனால், ஆதாரம் இருக்காது. உதாரணம்: அல்லாஹ்வுக்கு மகன் உண்டு எனச் சொல்வது. இப்படியே, எதையாவது ஒரு பண்பை அல்லாஹ்வுக்கு இல்லை என்பார்கள். அதற்கும் ஆதாரம் இருக்காது. உதாரணம்: அல்லாஹ் கண்ணில்லாமல் பார்க்கிறவன் எனச் சொல்வது. உண்டு, இல்லை என்பதில் இங்கு வழிகேடு வந்திருக்கிறது. எப்படி?

அல்லாஹ்வுக்கு மகன் உண்டு என்பவர்கள் யாரும் அல்லாஹ்வின் மகனைப் பார்த்ததில்லை; அவனும் தனக்கு அப்படியொரு பண்பு இருப்பதாய் அறிவித்ததில்லை. ஆக, இது வழிகேடு. (தனக்கு மகன் யாரும் இல்லை என்று அல்லாஹ் சொன்னதிலிருந்து இதைப் புரிந்துகொள்கிறோம்.)

நபித்தோழர்கள் – நபிமார்களுக்கு அடுத்தவர்கள்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய தோழர்கள்தாம் இச் சமுதாயத்தின் மூஃமின்களில் முதல் தரமானவர்கள். நபிவழியைப் பின்பற்றுவோர் அவர்களை நேசிப்பார்கள்; அவர்களையே நண்பர்களாகக் கொள்வார்கள்; நபிமார்களுக்கு அடுத்து மனிதர்களில் மிகச் சிறந்தவர்கள் அவர்களே என்றும் நம்புவார்கள். காரணம், அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

خَيْرُ أُمَّتِي قَرْنِي ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ

என் சமுதாயத்தில் மிகச் சிறந்தவர்கள் எனது தலைமுறையே. அவர்களுக்குப் பின், அவர்களை அடுத்து வருவோர் சிறந்தவர்கள். அவர்களுக்குப் பின், அவர்களை அடுத்து வருவோர் சிறந்தவர்கள். *(அறிவிப்பு: இம்றான் இப்னு ஹுசைன் ؓ, புகாரீ 3650)*

இந்த நபிமொழி உண்மை என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. இங்கு கூறப்படும் மூன்று தலைமுறைகளையே ஸலஃபுஸ் ஸாலிஹீன் என்றும் கூறுகிறோம். அதாவது, ஸஹாபா எனும் நபித்தோழர்கள் முதல் தலைமுறை. இவர்களிடம் கல்வி பயின்று இவர்களைப் பின்பற்றிய தாபிஈன் என்போர் இரண்டாம் தலை முறை. இவர்களிடம் கல்வி பயின்று இவர்களைப் பின்பற்றிய தபஉ தாபிஈன் என்போர் மூன்றாம் தலைமுறை.

இந்த மூன்று தலைமுறைகளும் நபிவழியைப் பின்பற்றுவதில் நமக்கு முந்திச் சென்றோர் என்பதனால் இவர்களை ஸலஃப் என்று கூறப்படும். இவர்கள் அனைவரும் நல்லோர் என்பதால் ஸாலிஹீன் எனும் அடைமொழி சேர்த்து ஸலஃபுஸ் ஸாலிஹீன் என அழைக்கப்படும்.

நபித்தோழர்களில் மிகச் சிறந்தவர் அபூபக்ர் அஸ்ஸித்தீக் ؓ. அவர்களுக்கு அடுத்து உமர் அல்ஃபாரூக் ؓ, அவர்களை அடுத்து உஸ்மான் தின்னூரைன் ؓ, பின்பு அலீ அல்மூர்தளா ؓ.

இந்த நான்கு பேரை அடுத்து, சொர்க்க நற்செய்தி பெற்ற பத்துப் பேர்களில் மீதமுள்ளவர்கள் சிறந்தவர்கள். அதன் பிறகு மற்ற நபித்தோழர்கள் அனைவருமே சிறந்தவர்கள். அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் இதில் உறுதியாக இருக்கிறார்கள்.

சொர்க்க நற்செய்தி பெற்ற நபித்தோழர்கள் பலராவர். அவர்களில் ஒரே நபிமொழியில் நற்செய்தி பெற்றோர் பத்துப் பேர். அபூபக்ர்,